கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No.33/2023**

2025-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 1 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சோமசுந்தரம் | வயது | 68 |
| தந்தை பெயர் | குமாரசாமி | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | கருப்பமுதலியார் கோட்டை | தாலுக்கா | |

( 1 முதல் 6 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது கருப்பமுதலியார் கோட்டையில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அசா.1 எனது மனைவியின் தங்கை மகள் ஆவார். ஆஜர் 1 முதல் 6 எதிரிகளை எனக்கு தெரியும். அசா.1 ன் கணவர் தான் ஆஜர் 1 வது எதிரி ஆவார். ஆஜர் 2 வது எதிரி அசா.1 ன் மாமியார் ஆவார். ஆஜர் 3 வது எதிரி அசா.1 ன் மாமானார் ஆவார். ஆஜர் 4 ,5 வது எதிரிகள் அசா.1 ன் நாத்தனார் ஆவார். ஆஜர் 6 வது எதிரி அசா.1 ன் நாத்தனார் கணவர் (5 வது எதிரி) ஆவார். கடந்த 27.06.2019 ம் தேதி ஆனி மாதத்தில் அசா.1 ஐ ஆஜர் 1 வது எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்தோம். ஆஜர் 1 வது எதிரியின் குடும்பத்தார் அசா.1 ன் திருமணத்திற்கு நீங்கள் செய்வதை செய்யுங்கள் என்று சொன்னார்கள். நாங்கள் அசா.1 க்கு 25 பவுன் நகையும், தளவாடசாமான்களும் வண்டியுடன் சேர்த்து ரூ.7 லட்சம் மதிப்பில் சீர்வரிசை செய்தோம். ஆனி முடிந்து ஆடி மாதத்திற்கு அசா.1 ஐ அழைப்பதற்காக ஆலடிகருப்பூருக்கு எதிரிகள் வீட்டிற்கு சென்றோம். அசா.1 ஐ அழைப்பதற்காக நானும், எனது மைத்துனி செந்தாமரை அவரது கணவர் குணசேகரன் சென்றிருந்தோம். நாங்கள் சென்றவுடன் மீண்டும் நகை போட சொன்னோமே என்று ஆஜர் 2 வது எதிரி அசா.1 டம் கேட்டார். நாங்கள் அங்கு செல்வதற்கு முன்பே ஆஜர் எதிரிகள் அசா.1 டம் நகை போட சொல்லி கேட்டுள்ளார்கள். நாங்கள் அதற்கு திருமணத்தின் போது நீங்கள் கேட்ட நகைகளை செய்து விட்டோம். மீண்டும் நகை கேட்கிறீர்களே என்று கேட்டோம். நாங்கள் இதுகுறித்து ஆஜர் 1 வது எதிரியிடம் பேசியபோது ஆஜர் 1 வது எதிரி எனது அப்பா, அம்மா சொல்வது தான் முடிவு. மேலும் நகை போடும்படி சொன்னார். நாங்கள் நகை போடுவது குறித்து பேசி பார்த்தோம். ஒன்றும் ஆவது போல் தெரியவில்லை. அதனால் ஆஜர் எதிரிகளிடம் கொஞ்சம் கொஞ்சமாக நகை போடுகிறோம் என்று கூறினோம். அதன் பிறகு ஆஜர் எதிரிகள் ஆடிக்கு அசா.1 ஐ அழைத்து செல்லும்படி சொன்னார்கள். நாங்கள் அசா.1 ஐ ஆடிக்கு எங்கள் வீட்டிற்கு அழைத்து

சென்றோம். ஆடிக்கு அசா.1 எங்கள் வீட்டிற்கு வந்ததில் இருந்து ஆஜர் 1வது எதிரி போன் மூலம் நகை வாங்கியாச்சா என்று கேட்டு தொந்தரவு செய்தார். இந்நிலையில் ஆடி முடிந்தவுடன் மகள் நல்லமுறையில் வாழ வேண்டும் என்று நினைத்து அசா.1 ஐ ஆஜர் எதிரிகள் வந்து அழைத்தபோது அவர்களுடன் அவர்கள் வீட்டிற்கு அனுப்பி வைத்தோம். அசா.1 ஆஜர் எதிரிகள் வீட்டிற்கு சென்ற பிறகு அசா.1 டன் போனில் எங்களால் தொடர்பு கொள்ளவில்லை. அதனால் ஆஜர் 1 வது எதிரியின் போனிற்கு தொடர்பு கொண்டு அசா.1 டன் பேச வேண்டும் என்று சொல்லும்போது தான் அலுவலகத்தில் இருப்பதாகவும், வயலில் இருப்பதாகவும், வேறு இடங்களில் இருப்பதாகவும் சொல்லி வீட்டிற்கு போனவுடன் போனை அசா.1 டம் கொடுப்பதாக சொல்லுவார். ஆனால் அசா.1 டம் போனை கொடுத்து எங்களிடம் பேச சொல்லியதில்லை. இந்நிலையில் தலை பொங்கலுக்கு ஆஜர் எதிரிகள் வீட்டிற்கு வரிசை வைப்பதற்காக சென்றபோது ஆஜர் எதிரிகள் சத்தம் போட்டார்கள். நாங்கள் வரிசை வைக்க சென்ற தினம் ஆஜர் 1வது எதிரி வீட்டில் இல்லை. நாங்கள் வரிசை வைத்து விட்டு வந்துவிட்டோம். தை மாதம் பிறந்தவுடன் மீண்டும் ஆஜர் எதரிகள் நாங்கள் போடததால் அசா.1 ஐ ஆஜர் 1 வது எதிரி அடித்துள்ளார். அசா.1 கோவித்து கொண்டு எப்படியாவது எங்கள் வீட்டிற்கு வந்து விடவேண்டும் என்று துணிமணிகளை எடுப்பதற்காக வீட்டிற்கு வெளியே வந்து விட்டு மீண்டும் வீட்டிற்குள் சென்றுள்ளார். வீட்டிற்கு வெளியே சென்றவர் மீண்டும் வீட்டிற்குள் வரக்கூடாது என்று ஆஜர் 2 வது எதிரி சொல்லி ஆஜர் 1 வது எதிரியை அசா.1 ஐ வெளியே தள்ளும்படி சொல்லியுள்ளார். ஆஜர் 1 வது எதிரி எனக்கு போன் செய்து உங்கள் பொண்ணு கோவித்து கொண்டு உள்ளது என்று சொன்னார். நான் வயலில் அறுப்பு ஆகிகொண்டு இருக்கிறது என்று நாளை வருகிறேன் என்று சொன்னேன். அதற்கு ஆஜர் 1 வது எதிரி உடனே வந்து முடிவு என்ன வென்று சொல்லுங்கள் என்று சொன்னார். ஆஜர் 1வது எதிரி இதுபோல் கூறியவுடன் எனக்கு பதறி கொண்டு அறுப்பை நிறுத்திக்கொண்டு ஆஜர் எதிரிகள் வீட்டிற்கு சென்றோம். நான் அங்கு போய் என்னவென்று விசாரித்தேன். அங்கு அசா.1 அப்போது அங்கு இல்லை. நான் அசா.1 எங்கே என்று கேட்டேன். அதற்கு ஆஜர் 1 வது எதிரி அசா.1 கோவிலில் உட்கார்ந்து இருக்கிறார் என்று சொன்னார். நான் கோவிலில் இருந்து அசா.1 ஐ அழைத்து கொண்டு ஆஜர் எதிரிகள் வீட்டிற்கு சென்றேன். வீட்டிற்கு சென்றவுடன் தேவடியா வீட்டை விட்டு வெளியே போனவ வீட்டிக்குள்ள நுழைய கூடாதுனு ஆஜர் 1, 2 எதிரிகள் சத்தம் போட்டார்கள். நான் ஆஜர் எதிரிகளிடம் ஒரு சின்ன பொண்ணை அடித்து பேசியுள்ளீர்கள் எப்படி அந்த பொண்ணு தாங்கும் என்று கேட்டேன். அதற்கு ஆஜர் எதிரி காலில் விழுந்து மன்னிப்பு கேட்கும் படி சொன்னார். நான் அசா.1 ஐ ஆஜர் எதிரிகள் சொல்லியது போல் காலில் விழுந்து மன்னிப்பு கேட்கும் படி சொன்னேன். அசா.1ம் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டார். மீண்டும் எதிரிகள் நகை பற்றி கேட்டபோது கொஞ்சம் கொஞ்சமாக செய்து விடுவோம் என்று சொன்னேன். நகை போடவில்லை என்றால் அசா.1 ஐ எனது வளர்ப்பு மகள் என்று சான்று வாங்கி வா என்று ஆஜர் 1

வது எதிரி சொல்லியுள்ளார். அதில் இருந்து அசா.1ஐ ஆஜர் எதிரிகள் சித்தரவதை செய்துள்ளனர். அசா.1ஐ ஆஜர் 1வது எதிரி அடித்து, துன்புறுத்தி, தாலியை அறுத்து, உன்னை மண்ணெண்னெய் ஊற்றி கொளுத்தினால் கேட்பதற்கு யார் உள்ளார் என்று கேட்டு சித்தரவதை செய்துள்ளார். ஆஜர் 1 வது எதிரி அசா.1டம், அசா.1ன் சாவிற்கு அசா.1ன்றே காரணம் என்று எழுதி வாங்கிகொண்டுள்ளார். எனக்கு யாரோ போன் செய்து அசா.1ஐ ஆஜர் எதிரிகள் அடித்து துன்புறுத்துவதாக சொன்னார்கள். நானும், எனது உறவினர்கள் நான்கைந்து பேரும் ஆலடிககப்பூருக்கு ஆஜர் 1 வது எதிரியின் வீட்டிற்கு சென்றோம். ஆஜர் 1 வது எதிரி வீட்டிற்கு செல்வதற்கு முன்பு குடவாசல் காவல் நிலையம் சென்று நடந்த சம்பவம் குறித்து சொன்னோம். ஆய்வாளர் மற்றும் ஒரு காவலர் உதவியுடன் ஆஜர் எதிரிகள் வீட்டிற்கு சென்றோம. அசா.1 அங்கு இல்லை. ஆஜர் 3 வது எதிரி மட்டும் இருந்தார். என்னுடன் வந்த ஆய்வாளர் மற்றவர்கள் எங்கே என்று கேட்டதற்கு கோவிலுக்கு சென்றிருப்பதாக ஆஜர் 3 வது எதிரி சொன்னார். ஆஜர் 3 வது எதிரியிடம் எந்த கோவிலுக்கு சென்றுள்ளார்கள் என்றும், அங்கு அழைத்து செல்லுங்கள் என்றும் கூறியபோது ஆஜர் 3 வது எதிரி ஆஜர் 4 வது எதிரி குடியிருக்கும் ஒரு ஐயர் வீட்டிற்கு அழைத்து சென்றார். அங்கு அசா.1 மற்றும் மற்ற எதிரிகள் இருந்தார்கள். ஆய்வாளர் ஆஜர் எதிரிகளிடம் விசாரித்து விட்டு அசா.1டமும் விசாரித்து விட்டு அசா.1டம் நீங்க எங்க செல்கிறீர்கள் என்று கேட்டதற்கு அசா.1 எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிடுகிறேன் என்று கூறி எங்களுடன் வந்து விட்டார். அதன் பிறகு பேச்சு வார்தையில் பிரச்சனை முடியாததால் அசா.1 எதிரிகள் மீது நன்னிலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எந்த போலீசார் எந்த தேதியில் என்னை விசாரணை செய்தனர் என்றால் நன்னிலம் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரணை செய்தனர். தேதி நினைவில் இல்லை. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் நன்னிலம் அனைத்து மகளிர் காவல் நிலைத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நன்னிலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் எந்த தேதியில் யாரால் கொடுக்கப்பட்டது என்றால் அசா.1ல் தை மாதத்திற்கு பிறகு கொடுக்கப்பட்டது. திருமணமாகி 19 நாட்களிலேயே வரதட்சனை பிரச்சனை ஆரம்பித்து விட்டது என்றால் சரிதான். பிரச்சனை ஆரம்பித்தில் இருந்து 9 மாதங்கள் கழித்து புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நன்னிலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் குறித்து குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டதா என்பது குறித்து நாங்கள் கேட்டோமா என்றால் சமூக நலத்துறை அலுவலர்களுக்கு புகாரை அனுப்பிதாக கூறினார்கள். அதனை தொடர்ந்து சமூக நலத்துறையில் இருந்து இருவரையும் அழைத்து விசாரணை செய்தார்களா என்றால் செய்தார்கள். சமூக நலத்துறையில் நடந்த விசாரணையின்

அடிப்படையில் அசா.1க்கு எவ்விதமான வரதட்சனை கொடுமையும் நடக்கவில்லை என நன்னிலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு அறிக்கை அனுப்பப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அதன் பிறகு எனது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி நாங்கள் திருவாரூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தனி புகார் கொடுத்தோம் என்றால் இல்லை. ஜீவானம்ச தொகை கேட்டு புகார் கொடுத்தோம். குற்றவியல் வழக்கை தொடர இயலாத காரணத்தினால் நீடாமங்கலம் நீதிமன்றத்தில் ஜீவானம்ச கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மன்னார்குடி குடும்ப நல் நீதிமன்றத்தில் ஜீவானம்ச வழக்கு நடந்து வருகிற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 17.04.2021 ம் தேதிக்கு பிறகு என்னை நன்னிலம் போலீசார் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூறுவதுபோல 19 நாட்களுக்குள் புகார் கொடுக்க காரணத்தினால் அவ்வாறு பிரச்சனை எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. அசா.1 எனது வளர்ப்பு மகள் திருமணத்தின் போது 1வது எதிரி என்ன வேலை பார்த்தார் என்றால் மன்னார்குடி TSO அலுவலகத்தில் தற்காலிகமாக வேலை பார்ப்பதாக சொன்னார்கள். என்ன வேலை பார்க்கிறார், எவ்வளவு சம்பளம் என்று நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. என்ன வேலை பார்க்கிறார் என்று தெரியாமலேயே திருமணத்தின் போது 25 பவுன் செய்ததாகவும், ரூ.7 லட்சம் மதிப்பில் சீர்வரிசை செய்ததாகவும் கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. 25 பவுன் செய்ததற்கு எந்த ஆதாரமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. நகை போடப்பட்டது. வண்டி வாங்கி கொடுக்கப்பட்டது. பாத்திர சாமான்கள் வாங்கிய ரசீதுகள் எதிரிகளிடம் கொடுத்தோம். நாங்கள் நகை செய்ததற்கும், அவர்கள் கொடுமை செய்ததற்கும் எவ்வித ஆதாரமும் இல்லை என்றால் சரியல்ல. பஞ்சாயத்தில் அசா.1 ஏட்டிக்கு போட்டி செய்ததாக கூறியதனால் அசா.1 தன்னிச்சையாக மன்னிப்பு கேட்டார் என்றால் சரியல்ல. அசா.1 ஆஜர் 1 வது எதிரியும் எவ்வளவு நாட்கள் கணவன் மனைவியாக குடும்பம் நடத்தினார்கள் என்றால் 9 மாதங்கள் வாழ்ந்தார்கள். அசா.1 ம் 1 வது எதிரியும் மன்னார்குடி பொற்றாமரை குளம் வடக்கரையில் வாடகை வீட்டில் எவ்வளவு நாட்கள் கணவன் மனைவியாக வாழ்ந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கூட்டுக்குடும்பமாக சிறிது நாட்கள் எதிரிகளுடன் வாழ்ந்து விட்டு பின்னர் மன்னார்குடி வாடகை வீட்டில் குடியிருந்தாரகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு மேற்படி விவரங்கள் தெரியும் நான் தெரியாது என்று வழக்கிற்காக பொய்யாக கூறிகிறேன் என்றால் சரியல்ல. அசா.1 எனது வளர்ப்பு மகள் என்றால் சரிதான். அசா.1 க்கு உடன்பிறந்தவர் சகோதரி மட்டும் தான் சகோதரர் இல்லை என்றால் சரிதான். அசா.1க்கு சகோதரர் இல்லை என்பதால் 1வது எதிரியை வீட்டோடு மாப்பிள்ளை ஆக்க வேண்டும் என நானும் அசா.1 ன் பெற்றோரும் முடிவு செய்து அதனால் தான் இரு குடும்பத்திற்கும் பிரச்சனை என்றால் சரியல்ல. மன்னார்குடியில் ஏற்பட்ட குடும்ப தகராறு காரணமாக தான் அசா.1 எங்கள் வீட்டிற்கு வந்தார் என்றால் ஆஜர் 1 வது எதிரியின் தாயார் அசா.1 பைத்தியம் எனவும், அவரை

திருத்தி அனுப்புங்கள் என்று கூறி அசா.1ஐ எங்கள் வீட்டில் வந்து விட்டார். அசா.1 எங்கள் வீட்டிற்கு வந்த பின்னர் தான் நாங்கள் புகார் கொடுத்தோம் என்றால் எங்கள் வீட்டிற்கு வந்த பின்னர் பஞ்சாயத்து நடந்தது அதன் பிறகு தான் புகார் கொடுத்தோம். நாங்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் விசாரணை செய்யப்பட்டு புகாரில் எவ்வித முகாந்திரமும் இல்லை என்பதால் புகார் முடிக்கப்பட்டது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. காவல் துறையினர் விசாரணை செய்யவில்லை என்பதால் நாங்கள் எங்கள் வழக்கறிஞர் மூலமாக எதிரிகளை பழிவாங்கும் நோக்கத்தோடு தனி புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறிய புகார் முடிக்கப்பட்டது என்றாலும் நான் கூறிவதற்கும் புகாருக்கும் எவ்வித தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/--
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
திருவாரூர்.